# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE

# මැතිවරණ ප්‍රචණ්ඩත්ව නිරීක්ෂණ මධ්‍යස්ථානය

# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்


105 – 5th Lane, Colomo – 03, Sri Lanka

Tel: +94 11 2564404, Fax: +94 11 4722632

**E-mail:** cmev@cpalanka.org **Website:** http://cmev.wordpress.com


## தென்மாகாண சபைத் தேர்தல் - 2009

### ஊடக அறிக்கை இல - 03

**2009 – ஒக்டோம்பர் 04**

**04 ஒக்டோபர், 2009 கொழும்பு இலங்கை** தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) இதுவரையில் 63 தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்களை உறுதிப்படுத்தியுள்ளது. இவற்றுள் 17 சம்பவங்கள் பாரிய வன்முறைச் சம்பவங்களாகவும் 46 சம்பவங்கள் பாரியதற்ற வன்முறைச் சம்பவங்களாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. கூடுதலான வன்முறைச் சம்பவங்கள் காலி மாவட்டத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. கிடைக்கப்பெற்ற 17 பாரிய வன்முறைச் சம்பவங்களுள் 11 வன்முறைச் சம்பவங்கள் இம்மாவட்டத்திலிருந்து அறிவிக்கப்படுகின்ற அதே வேளைமொத்தமாக கிடைக்கப்பெற்றுள்ள 63 சம்பவங்களுள் 28 சம்பவங்கள் காலி மாவட்டத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளன. அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து 22 சம்பவங்களையும் மாத்தறை மாவட்டத்திலிருந்து 13 சம்பவங்களையும் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) இதுவரையில் பதிவுசெய்துள்ளது.

**உட்கட்சி வன்முறைகள் - ஐ.ம.சு.முன்னணி**

2ம் திகதி காலி மாவட்டத்தின் அஹுங்கமை பொலிஸ் பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் ஐ.ம.சு.முன்னணி வேட்பாளர் சஜீன் டி வாஸ் குணவர்தன (வேட்பாளர் இலக்கம் 25) அவர்களின் ஆதரவாளர் குழுவொன்று அதே கட்சி வேட்பாளரான நிஷாந்த முத்துஹெட்டிகமகே (வேட்பாளர் இலக்கம் 20) அவர்களின் ஆதரவாளர் குழுவொன்றை தாக்கியுள்ளது. இது தொடர்பான முறைப்பாடொன்று (EIB /76/11) அஹுங்கமை பொலிஸ் நிலையத்தில் திரு. டி' ஹிமல் குமார அவர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்முறைப்பாட்டில் சஜீன் டி வாஸ் குணவர்தன அவர்களின் ஆதரவாளர் குழு வாள் மற்றும் கம்புத்தடிகளை பயன்படுத்தி தனது ஆதரவாளர்களை தாக்கியதாகவும் நிஷாந்த முத்துஹெட்டிகமகே யின் ஆதரவாளரான திரு. தயா ஹேமன்த என்பவரை கடத்தியதுடன் 1700 ரூபா பணமும் கொல்லையடிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் (CMEV) கண்காணிப்பாளர் ஒருவர் கராபிட்டிய பொது வைத்தியசாலைக்கு 03 ம் திகதி விஜயமொன்றை மேற்கொண்டதுடன் இத்தாக்குதல் சம்பவத்தில் காயத்திற்குள்ளான திரு. டி'எச்' குமார மற்றும் பி'எம்'எல்' செனவிரத்ன ஆகியோர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளார். தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) அஹுங்கம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அவர்களை தொடர்புகொண்டபொழுது இச்சம்பவம் தொடர்பாக இதுவரையில் எவரும் கைதுசெய்யப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

**தெனியாயவில் 03 ஜே'வி.பி ஆதரவாளர்களுக்கு தாக்குதல்**

ஒக்டோபர் 03ம் திகதி அதிகாலை 1.00 மணியளவில் ஜே'வி'பி. வேட்பாளரான பிரியன்த ராஜபக்ஷ (வேட்பாளர் இலக்கம் 19) அவர்களின் ஆதரவாளர்களான ரஞ்சித் நிஷாந்த, ஜினதாச மற்றும் எல்'கே' தயாநந்த ஆகியோர் ஐ.ம.சு.முன்னணி வேட்பாளரான சரத் வீரவன்ச (வேட்பாளர் இலக்கம் 05) அவர்களின் ஆதரவாளர் குழுவொன்றினால் தாக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தின் பொழுது ஜினதாசவிற்கு தலையில் காயமேற்பட்டதுடன் ரஞ்சித் நிஷாந்தவின் கால் உபாதைக்குள்ளாகி உள்ளது. மேலும் அவர்கள் தற்பொழுது மொரவக்க மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பிரியந்த ராஜபக்ஷவை தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) தொடர்பு கொண்ட பொழுது தனது ஆதரவாளர் குழு 05ம் திகதி சனத் ஜயசூரிய விளையாட்டரங்களில் நடைபெறவுள்ள ஜே'வி.பி. பொதுக்கூட்டம் தொடர்பான சுவரொட்டிகளை மொரவக்க நகரில் ஒட்டிக்கொண்டிருந்த வேளை 04 வாகனங்களில் வந்த ஐ.ம.சு.முன்னணி வேட்பாளர்களான திரு. வீரவன்ச (வேட்பாளர் இலக்கம் 05) மற்றும் சந்திம ராசபுத்திர (வேட்பாளர் இலக்கம் 12) உள்ளிட்டோரின் ஆதரவாளர் குழுவினால் தாக்கப்பட்டதாக தெரிவித்தார். மேலும் வன்முறையாளர்கள் துப்பாக்கியொன்றை காட்டி தனது ஆதரவாளர்களை அச்சுறுத்தியதாகவும் திரு. வீரவன்ச இச்சம்பவத்தின் பொழுது கார் வண்டிக்குள் அமர்ந்திருந்ததாகவும் குற்றம் சுமத்தினார்.

தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் திரு. வீரவன்ச அவர்களை தொடர்புகொண்ட பொழுது பொதுக்கூட்டமொன்றை நிறைவுசெய்துவிட்டு திரும்பிக்கொண்டிருக்கும் வேளையில் ஜே.வி.பி. ஆதரவாளர் குழுவொன்றினால் தாம் வழிமறைக்கபட்டதாகவும் தனது வாகனத்தின் பக்க கண்ணாடி ஒன்று சேதப்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார். இதனை தொடர்ந்து இரு குழுக்களுக்கிடையே மோதல் நிலைமையொன்று ஏற்பட்டதாகவும் அந்நிலைமையை கட்டுப்படுத்துவதற்காகவேண்டி தனது ஆதரவாளர் குழுவை உடனடியாக அவ்விடத்தை விட்டு நீங்குமாறு தான் அறிவுறுத்தியதாகவும் குறிப்பிட்டார் என்றாலும் அவர்களது 02 வாகனங்கள் மொரவக்க பொலிஸ் நிலையத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கேற்ப பிட்டபெத்த பொலிஸாரினால் தடுத்துவைக்கப்பட்டு 02 மணித்தியாலயங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டன.

மொரிவக்க பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. பிரபாத் தேசப்பிரிய இச் சம்பவம் தொடர்பாக 03ம் திகதி காலை 3.00 மணியளவில் திரு ரஞ்சித் நிஷாந்த அவர்களினால் முறைப்பாடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பிட்டபெத்த பொலிஸ் நிலையத்தில் ஐ.ம.சு. வேட்பாளர் திரு. சரத் வீரவன்ச அவர்களினால் இச் சம்பவம் தொடர்பாக இன்னுமொரு முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்ததுடன் மொரவக்க பொலிஸ் நிலையத்தினால் மேலதிக விசாரணைகள் நடைபெற்றுவருவதாகவும் தடுத்துவைக்கப்பட்ட 02 வாகனங்களும் பொலிஸ் பிணையில் பிட்டபெத்த பொலிஸாரினால் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

தேர்தல் நெருங்கும் இவ்வேளையில் உட்கட்சி மற்றும் கட்சிகளுக்கிடையிலான மோதல்கள் அதிகரித்துள்ளதினால் அரசியல் வன்முறைகளுக்கான சூழலொன்று தென்மாகாணத்தின் 03 மாவட்டங்களிலும் உருவாகியுள்ளது என்பதை தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் அவதானப்படுத்துகின்றது. எனவே, அரசியல் கட்சித் தலைவர்கள் தேர்தல் ஆணையாளர் மற்றும் பொலிஸாரை தேர்தல் ஒழுங்குகளுக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய மற்றும் இலங்கையில் ஜனநாயகத்தை பாதிக்ககூடிய வகையில் பல்வேறு கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களினால் மேற்கொள்ளப்படும் வன்முறைகளை தடுப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அழைப்புவிடுக்கின்றது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) 1997 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இந்நிறுவனம், மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் (CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் INFORM மனித உரிமைகள் தொடர்பான ஆவணப்படுத்தல் நிலையம் ஆகிய நிறுவனங்களின் ஒன்றியமாகும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் செயலகமாக செயற்படுகின்றது.

துசித்த சிறிவர்தன (சட்டத்தரணி)
தேசிய இணைப்பாளர்.